1975 ஏப்ரல் 11]

திரு. என். மருதாசலம் : தேசீயவுடைமையாக்கப்பட்ட ஆலை களில் உள்ள தொழிலாளர்களின் சம்பளம் பாதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலாளர்களுக்கு நல்லதுதான் என்று கருதுகிறேன். இப்போது மோசமான ஆலைகளை எடுத்து நடத்தியதற்குப் பின்னுல் அவை லாபம் சம்பாதித்து அவர்கள் பாக்கிகளை எல்லாம் கொடுத்திருக்கிருேம். எனவே, தொழிலாளர்களுக்கு இது நல்லதுதான்.

சண்முகர் மில்ஸ், ராஜபாளையம்

*653 வினு—திரு. க. சுப்பு : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜபாளையம் ஸ்ரீ சண்முகர் மில்ஸ் நூற்பாலைக்கு அரசு கடன் உதவி எதுவும் அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ)&(இ) : நொடித்த ஆலைகள் நூல் விற்பனையின்பேரில் செலுத்த வேண்டிய விற்பனை வரியில் ஒரு பகுதியை கடனுக வைத்துக்கொள்ளலாம் என்ற திட்டத்தின் கீழ் இந்த ஆலை ரூ. 65,084.67 காசு பெற்றது.

திரு. க. சுப்பு : அப்படி நேரடியாகச் செய்கிற உதவி தவிர நிதி உதவிக் கழகம் மூலம் கடன் பெற உத்தரவாதம் தரப்படுகிறது. அப்போது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை—நிரந்தரமாக இருந்தவர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு தற்காலிகமாகப் போட்டிருக்கிருர்கள்—மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவாதம் கொடுக்கும்படி தொழிலாளர் நல அரசு என்பதால் இந்த அரசு அந்த முதலாளிகளை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட கோரிக்கைகள் தொழிலாளர்களிடமிருந்து வருமானுல், நிச்சயம் அரசின் சார்பில் வலியுறுத்தலாம்.

Industrial Co-operative Bank

*654 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to integrate the Industrial Co-operative Bank into the regular co-operative structure; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ)&(இ) தொழில் கூட்டுறவு வங்கி சில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டுமே மைய வங்கியாக தம்முடைய நடவடிக்கைகளை உட்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி ஆலோசனை கூறியுள்ளது. இவ்வரசு இந்திய ரிசர்வ் வங்கியின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்த ஸ்பிக் போன்ற ஸ்தாபனங்களுக்கு மெஷினெரீஸ் போன்றவை வாங்குவதற்கு நீண்ட காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ரா மெட்டீரியல்ஸ் வாங்க பல பாங்குகளும் கடன்கள் வழங்குகின்றன. இப்படி பல்வேறு ஸ்தாபனங்கள் பல்வேறு கடன்கள் கொடுக்கின்றன. எனவே, எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து ஒரே ஸ்தாபனமாக வைத்து என்னென்ன கடன்கள் வேண்டுமோ இவற்றைக் கொடுக்கக்கூடிய முறையில் ஒரு ஏற்பாட்டினைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது ரிசர்வ் பாங்க் ரீ பைனான்சிங் பெஸிலிட்டீஸ் இல்லை என்ற முறையில் நாட்டில் ஒரு அப்பெக்ஸ் பாங்க் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னேன்.

திரு. கே. எ. வகாப் : சென்னை மாநிலத்தில் ஒரே ஒரு தொழில் கூட்டுறவு வங்கிதான் இருக்கிறது. அதற்கும் இன்னும் ரிசர்வ் பாங்க் அனுமதி அளிக்கவில்லை. அதற்கு அனுமதி பெற்றுத் தரப்படுமா? 50 லட்சம் கடன் வேறு அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதைப்பற்றியும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நாம் மத்திய அரசுக்கு இதுபற்றி எழுதியிருக்கிறோம், இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் பாங்க்குக்கு ரீ பைனான்சிங் பெஸிலிடீஸ் வேண்டுமென்று. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களது யோசனை ஆலோசனையில் இருக்கிறது.

Assistance for manufacture of clocks

*655—*Q.* THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

Whether any assistance is given to the firms manufacturing clocks and time pieces in our State?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், டைம் எய்ட் இந்தியா, சென்னை என்ற கடிகாரங்கள், மேஜை கடிகாரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை கடன் உதவி அளித்திருக்கிறது. அரசினரால் நிறுவப் பட்டுள்ள பல்வேறு கழகங்களினால் தொழிலுக்கு வழங்கப்படும் உதவிகளை கடிகாரம் உற்பத்தி செய்வோரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.